பேரூராட்சி அலுவலகம்,
மல்லாங்கிணறு,

<u>ந.க.எண்.103/2022</u> <u>நாள்: 29.06.2022.</u>

## கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022–2023
## <u>ஒப்பந்தப்புள்ளி அழைப்பு</u>

விருதுநகர் மாவட்டம், மல்லாங்கிணறு பேரூராட்சியில் கீழே கண்டுள்ள வேலைகளை செய்ய இப்பேரூராட்சியில் பதிவுப் பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 19.07.2022ம் தேதி செவ்வாய் கிழமை மாலை 3.00 மணி வரை செயல் அலுவலர் அவர்களாலோ அல்லது அவரால் அங்கீகாரம் பெற்றவராலோ பெற்றுக்கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அன்றைய தேதியில் 3.30 மணி அளவில் வந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும் குறைந்த ஒப்பந்த புள்ளிகள் பேரூராட்சி மன்ற அங்கீகாரத்திற்கு பின் ஊர்ஜிதம் செய்யப்பட்டு ஆணை வழங்கப்படும்.

வேலைகளுக்கான ஷெட்டியூல் படிவங்களை 29–06–2022ம் தேதி முதல் 18–07–2022ம் மாலை 3.00 மணி வரை கீழ்க்கண்ட இணைய தளத்தில் இலவசமாக எடுத்துக்கொள்ளலாம்.

இணைய தள முகவரி:1.http://tntenders.gov.in, 2.http://tenders.tn.gov.in

மேலும் ஷெட்டியூல் படிவங்களை நேரடியாக பெற விரும்புவோர் 29.06.2022ம் தேதி முதல் 18.07.2022ம் மாலை 3.00 மணி வரை மல்லாங்கிணறு பேரூராட்சி அலுவலகத்தில் ரொக்கமாக கீழ்க்கண்ட ஷெட்டியூல் படிவம் கட்டணங்களை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

வரப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் அந்த வேலைக்கு எதிரே குறிப்பிட்டுள்ள முன்வைப்புத் தொகையினை ரொக்கமாக செலுத்தி ஒப்பந்த புள்ளியுடன் இணைத்து கொடுக்கவேண்டும். இது சம்மந்தமாக நிபந்தனை மற்றும் விவரங்களை பேரூராட்சி அலுவலக நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம். டெண்டரை மறு தேதிக்கு ஒத்தி வைக்கவோ அல்லது ரத்து செய்யவோ செயல் அலுவலருக்கு முழு அதிகாரமும் உண்டு.

| **தொகுப்பு எண்** | **வேலையின் பெயர்** | **திட்டம்** | **வேலையின் மதிப்பு தொகை.ரூ. (லட்சத்தில்)** | **டெபாசிட் தொகை** | **டெண்டர் ஷெட்யூல் படிவம் கட்டணம்** | **வேலை செய்து முடிக்கும் காலம்** |
|---|---|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.4, சர்வே எண்.111/3 திம்மன்பட்டி சாலை பொது மயானத்தில் நவீன எரிவாயு தகன மேடை அமைத்தல் | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022–23 | 148.00 | 148000 | 15600 (மதிப்பு கூட்டு வரி உட்பட) | 9 மாதங்கள் |
| 2. | சர்வே எண்.333/1ல் உள்ள சின்னக்குளம் ஊரணியை மேம்பாடு செய்தல் | | 82.30 | 82300 | 15600 (மதிப்பு கூட்டு வரி உட்பட) | 9 மாதங்கள் |

(ஒ.ம்).சு.துளசிதாஸ்
மன்றத்தலைவர்,
மல்லாங்கிணறு பேரூராட்சி
விருதுநகர் மாவட்டம்.

(ஒ.ம்).வை.அன்பழகன்
செயல் அலுவலர்,
மல்லாங்கிணறு பேரூராட்சி,
விருதுநகர் மாவட்டம்.

**<u>பெறுநர் :–</u>**

அனைத்து பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள் மற்றும் அலுவலக தகவல் பலகைக்காக.

**<u>நகல் :–</u>**

1. பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
3. கண்காணிப்பாளர், விழிப்பு மற்றும் கண்காணிப்பு துறை, விருதுநகர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
4. உதவி இயக்குநர், பேரூராட்சிகள், மதுரை மண்டலம், மதுரை அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
5. உதவி செயற்பொறியாளர் (பேரூராட்சிகள்) மதுரை மண்டலம், மதுரை அவர்களின் தகவலுக்கு அனுப்பப்படுகிறது.
6. இளநிலை பொறியாளர், காரியாபட்டி பேரூராட்சி (தொகுப்பு), விருதுநகர் மாவட்டம்.
7. அலுவலக கோப்புக்கு.